பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 12 செவ்வாய்க்கிழமை 29.12.2020 கதிர் 285

## 'கொரோனா'விலிருந்து 33,925 பேர் குணமடைவு

கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நிலையில் சிகிச்சை பெற்று வருபவர்களில் மேலும் 704 பேர் இன்று குணமடைந்து வீடு திரும்பினர்.

இதன்படி இலங்கையில் கொரோனாவின் பிடிக்குள் இருந்து மீண்டவர்களின் எண்ணிக்கை 33 ஆயிரத்து 925 ஆக 2

## மாகாண சபைத் தேர்தல் இப்போதைக்கு இல்லை

### மேலும் சில காலத்துக்கு ஒத்திவைக்க ஆளும் கட்சிக் கூட்டத்தில் யோசனை

மாகாண சபைகளுக்கான தேர்தலை அவசரமாக நடத்தாது, மேலும் சில காலத்துக்கு ஒத்திவைப்பதற்கு அரசுக்குள் யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நேற்று கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற ஆளும் கட்சிக் குழுக் கூட்டத்திலேயே 2

## யாழ்.மாநகர மேயர் தெரிவுக்கு ஆனோல்ட் பெயரே பரிந்துரை!

### ஊடகங்களிடம் பகிரங்கமாக அறிவித்தார் மாவை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நாளை நடைபெறவுள்ள மேயர் தெரிவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இம்மானுவல் ஆனோல்ட் மீண்டும் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

இந்தத் தகவலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இன்று பகிரங்கமாக அறிவித்தார்.

இரண்டு தடவைகள் யாழ். மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் 7



## இந்த முறை ஜெனிவாவில் வீரியமான புதிய தீர்மானம்!

### எதிர்பார்க்கின்றோம் என்கிறார் சுமந்திரன்

கிளிநொச்சி, டிசெம்பர் 29

மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக எடுக்கப்படுகின்ற புதிய தீர்மானம் வீரியமான தாகவும் செயற்றிறன் மிக்கதாகவும் இருக்க வேண்டும். அது ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் மேற்பார்வையைத் தக்கவைத்துக்கொள்வதாக இருக்க வேண்டும் என்கின்ற பொதுவான நிலைப்பாடு ஒன்று இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார். 2

## சொகுசுக் கார் சுக்கு நூறானது



மிகை வேகத்தில் கட்டுப்பாட்டை இழந்த சொகுசு கார் சுவரில் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதி படுகாயமடைந்துள்ளார். 2

## அரசியலுக்கு வர முடியவில்லை! என்னை மன்னித்து விடுங்கள்!!

### ரஜினி அதிரடி அறிவிப்பு

தமிழகத்தில் தான் கட்சி தொடங்கவில்லை என பிரபல நடிகர் ரஜினிகாந்த் இன்று அதிரடியாக அறிவித்துள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் புதிய கட்சி தொடர்பான அறிவிப்பை நாளைமறுதினம் 31ஆம் திகதி வெளியிடுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்தநிலையில், தான் கட்சி தொடங்கவில்லை என ரஜினிகாந்த் இன்று அறிவித்துள்ளார். 7

## ரஜினியின் முடிவால் தப்பியது தமிழகம்!!!

### மனோ சுட்டிக்காட்டு



ரஜினி நேரடி அரசியலை கைவிட்ட நிகழ்வு, தமிழகம் தப்பிப்பிழைத்த, மிக நல்ல ஒரு சம்பவம்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரின் முகநூல் பதிவு வருமாறு:-

ஆயிரம் விமர்சனங்கள் இருந்தாலும், தமிழ்நாடு, பல வட இந்திய மாநிலங்களை விட முன்னேறிய ஒரு மாநிலம். 2

## மாதோட்ட விகாரையின் பிக்கு காணி அபகரிப்பு முயற்சியாம்!

### சாள்ஸ் எம்.பி. நேரில் பார்வை



யுத்த காலத்தில் இராணுவ ஆக்கிரமிப்பில் அமைக்கப்பட்ட 'மாதோட்ட' விகாரையின் பெயரால் வரலாற்றுச் சிறப்புப் பெற்ற ஈச்சரங்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் 2

## ஒரே குடும்பத்தில் ஐந்து பேருக்கு வெல்லாவெளியில் வாள்வெட்டு!



மட்டக்களப்பு வெல்லாவெளி பொலிஸ் பிரிவுட்குட்பட்ட தும்பங்கேணி இளைஞர் விவசாய திட்டத்தில் ஒரே குடும்பத்தினை சேர்ந்த 05 பேர் மீது இனம்தெரியாத நபர்கள் 20 பேர் சேர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு வாளினால் வெட்டி தாக்கியுள்ளனர். 2

## 2024 ஜனாதிபதித் தேர்தலிலும் சஜித்தே வேட்பாளராகப் போட்டி

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் அமையவுள்ள கூட்டணியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸவே போட்டியிடுவார்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். 2

## கரணவாயில் குடும்ப மோதலில் பெண் உட்பட மூவருக்கு வெட்டு

யாழ்.பருத்தித்துறை கரணவாய் - முதலைகுழி கிராமத்தில் சகோதரர்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் பெண் ஒருவர் உட்பட 3 பேர் வாள் வெட்டுக்கு இலக்கான நிலையில் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் இன்று காலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் சந்திரமோகன் 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ரஜினியின் முடிவால் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வட இந்தியாவில், டெல்லி, மும்பாய், கொல்கத்தா, சண்டிகர், அஹமதாபாத் ஆகிய மாநகரங்களை சுற்றிய பகுதிகளில் மட்டுமே முன்னேற்றம் தெரியும்.

வட இந்தியாவில், உள்ளூரில், கிராமிய நாட்டுப் புறங்களில், பின்னேற்றம் கண்கூடாக தெரியும்.

தமிழ்நாட்டின் இந்த ஒப்பீட்டளவிலான முன்னேறிய நிலைமைக்கு காரணம் இம்மாநிலத்தையும், புதுச்சேரியையும் தேசிய கட்சிகள் அல்லாமல், திராவிட கட்சிகள் பல பத்தாண்டுகளாக ஆண்டு வருவதே காரணம்.

திராவிட இயக்க அணியின் மூலக் கொள்கை சமூக நீதி என்பதாகும். இது நீதிக் கட்சியிலிருந்து ஆரம்பமாகி பெரியார், அண்ணா ஆகிய பெருந்தலைவர்களால் செதுக்கப்பட்டதாகும். இதுதான் தமிழ்நாட்டின் முன்னேற்றத்துக்கு அடிநாதமாக விளங்குகிறது.

இந்த உண்மையை ஆய்வுரீதியாக ஆராய்ந்து பார்த்தால்தான் விளங்கும்.

தி.மு.க., அ.இ., அ.தி.மு.க. ஆகிய கட்சிகளின் அரசியல்வாதிகளின் அலங்கோலங்கள் உண்மை. ஆனால், இந்த அலங்கோலங்களுக்கு அப்பால் இன்னொரு உண்மையும் இருக்கின்றது.

வட இந்திய கட்சிகளின், அரசியலர்களின் 'படா' அலங்கோலங்கள் பற்றி தெரியாதவர்களும், வட இந்திய மாநிலங்களை நேரடியாக கண்டிராதவர்களும்தான் திராவிடக் கட்சிகளைக் குறை கூறுவார்கள்.

திராவிட கட்சிகளில் தவறு, பிழை, குற்றம் கணிசமாக இருக்கின்றன. அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. ஆனால், வட இந்திய மாநிலங்களை ஆளும் கட்சிகளின் கட்சிகளுடன் ஒப்பிடும்போது இவை மேல். இதுதான் உண்மை.

கல்வி, சுகாதாரம், ஜாதீயம் - பெண்ணடிமை ஒழிப்பு, பின்தங்கியோருக்கான கல்வி, அறிவியல், ஆங்கில மொழியறிவு, தொழில், அரசியல் துறை ஒதுக்கீடுகள், கைத்தொழில், வர்த்தகம், கலை, விளையாட்டு, போக்குவரத்து, தகவல் தொடர்பு என்ற பல்வேறு துறைகளில் தமிழகம் இந்தியாவில் முன்னேறிய மாநிலமாக இருக்கின்றது.

திராவிட கட்சிகளின் தவறுகள் இன்னமும் திருத்தப்பட்டு அவற்றுக்கு உள்ளேயே இருந்து உருவாகும் புதிய அமைப்புகள்தான் தமிழகத்தை இன்னமும் சிறந்த இலக்கை நோக்கி கொண்டு செல்ல முடியுமே தவிர, திராவிட கட்சிகளுக்கு மாற்று தேசிய கட்சிகள் அல்ல.

இந்தப் பின்னணியில் பார்த்தால் குறுக்கு வழியில் தேசிய கட்சிகளை ஆன்மீகம் என்ற பெயர் சூட்டி குறுக்கு வழியில் சிம்மாசனத்தில் உட்கார வைக்க முயன்ற நடிகர் ரஜினிகாந்த் நேரடி அரசியலை கைவிட்டமை, தமிழகத்தில் இன்று நிகழ்ந்த மிக நல்ல ஒரு சம்பவம் - என்றுள்ளது.

## கரணவாயில் குடும்ப ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சஜிந்தன் (வயது 29), சண்முகம் சிவஞானசுந்தரம் (வயது 55), தேவராசா ரஞ்சிதா (வயது 35) ஆகியோரே வெட்டுக் காயமடைந்திருக்கும் நிலையில்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். எனினும் சம்பவம் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு எதுவும் பதிவு செய்யப்படவில்லை எனப் பொலிஸர் கூறியிருக்கின்றனர்.

எனினும் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

## 2024 ஜனாதிபதித் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

2024 ஜனாதிபதி வேட்பாளர் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னரே எமது தரப்பு வேட்பாளரின் பெயர் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும். கட்சி மற்றும் கூட்டணியின் தலைவர்தான் வேட்பாளராக களமிறங்குவது சம்பிரதாயம்.

அந்தவகையில், ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸ பதவி வகிக்கின்றார். எதிர்காலத்தில் அமையவுள்ள கூட்டணியின் தலைவராகவும் அவரே செயற்படுவார். எனவே, சஜித்தான் ஜனாதிபதி வேட்பாளர் என்பது தெளிவு.

ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்வதற்கான பலமான வேட்பாளரும் அவரே. அவரைவிட மாற்றுவழி இல்லை. அதற்கான தேவையும் எழாது.

இந்த அரசு நாட்டை வங்குரோத்து நிலைக்கு அழைத்துச் செல்கின்றது. பொருளாதாரம் மற்றும் நிதித்துறைகள் வீழ்ச்சியடைந்துள்ளன. நாட்டை மீட்டெடுக்க வேண்டுமானால் அதற்கான அணி ஐக்கிய மக்கள் சக்தியாகும். அந்த சக்தியின் பின்னால் மக்கள் அணிதிரளவேண்டும் - என்றார்.

## மாதோட்ட விகாரையின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயத்திற்கு சொந்தமான காணியை அபகரிக்கும் முயற்சியில் குறித்த விகாராதிபதி ஈடுபட்டு வருகின்றமை குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளது.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு சொந்தமான காணியை 'மாதோட்ட' விகாரையின் பிக்கு அபகரிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்ற நிலையில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இன்று செவ்வாய்க்கிழமை காலை குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்டுள்ளார்.

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயத்திற்கு சொந்தமான 5 ஏக்கர் காணி சைவ மங்கையர் கழகத்துக்கு 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது.

குறித்த காணியானது நீண்ட காலமாக திருக்கேதீச்சர ஆலயத்தின் பராமரிப்பில் இருந்து வந்துள்ளது. இக் காணியானது நாட்டில் ஏற்பட்ட இடப் பெயர்வு காரணமாக இராணுவம் அவ் இடத்தில் நிலை கொண்டது. அதன் பின்னர் குறித்த காணி திருக்கேதீச்சர ஆலயத்திடம் மீளவும் கையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் அவ்விடத்தில் அமைக்கப்பட் விகாரை ஆலய காணியிலும் தனியார் காணியிலும் அமைக்கப்பட்டிருந்தது. மிகுதி காணி ஆலய நிர்வாகத்தின் பராமரிப்பில் இருந்தது. இந்நிலையில் கடந்த தினங்களாக குறித்த விகாரையின் பிக்கு மிகுதி காணியை அபகரிக்கும் நடவடிக்கையினை மேற்கொண்டு வந்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய நிர்வாகம் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனின் கவனத்திற்கு கொண்டு சென்றனர்.

இதையடுத்து இன்று செவ்வாய்க்கிழமை காலை குறித்த பகுதிக்குச் சென்று பார்வையிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த காணி அபகரிப்பு தொடர்பாக துரித நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக தெரிவித்தார். இதன் போது மன்னார் பொலிஸார், ஆலய நிர்வாகத்தினர், ஆலய பிரதம குரு ஆகியோர் குறித்த பகுதிக்கு சென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஒரே குடும்பத்தில் ஐந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:-

களுமுந்தன்வெளியை சேர்ந்த 20பேர் கொண்ட குழுவினர்தான் இந்த வாள்வெட்டு தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் எனத் தாக்குதலுக்குள்ளான நபர்கள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

வாள்வெட்டுக்கு இலக்காகிய ஐவரும் களுவாஞ்சிகுடி ஆதார வைத்தியசாலை சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளளார்.

மேலதிக விசாரணைகளை வெல்லாவெளி பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன், குறித்த சந்தேக நபர்கள் பொலிஸாரின் கண்களில் மண்ணை தூவி விட்டு மறைந்துள்ளனர் எனவும் பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர்

## சொகுசுக் கார் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தில் சொகுசு கார் மீட்கமுடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளபோதும் சாரதி காயங்களுடன் தப்பியிருக்கின்றார்.

இந்த சம்பவம் இன்று அதிகாலை கொழும்பு - பொது நூலக சுற்றுவட்ட வீதியில் அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்றிருக்கின்றது.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டிருக்கின்றனர்.

## இந்த முறை ஜெனிவா ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடயங்கள் தொடர்பான - கடந்தகால செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பிலான - விசேட கலந்துரையாடல் தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ். சிவகரன் தலைமையில் இன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. இந்த விசேட கலந்துரையாடலின் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிடுகையில் -

இன்றைய சந்திப்பு 4 மணித்தியாளங்கள் வரை இடம்பெற்றுள்ளது. புரிந்துணர்வுடன் இன்றைய உரையாடல் இடம்பெற்றது மகிழ்ச்சியளிக்கின்றது. எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்வு இடம்பெறுகின்றபோது, இலங்கை விடயத்தில் ஏற்கனவே அமுலில் உள்ள 40/1 என்ற தீர்மானம் முடிவுக்கு வர இருக்கிறது. அது மார்ச் மாதம் 2021 ஆம் ஆண்டு முடிவுக்கு வருவதாக இருந்தாலும் இந்த வருட ஆரம்பத்திலேயே இலங்கை அரசாங்கம் இந்த விடயங்களிற்கு ஒத்துழைக்க மாட்டோம் வெளியேறுகின்றோம் என்று அறிவித்தல் கொடுத்திருக்கின்றார்கள்.

இந்தச் சூழலில் விசேடமாக மார்ச் மாதம் நடைபெறவுள்ள அமர்விலே தமிழர் தரப்பிலே ஒன்றிணைந்த, ஒற்றுமையான கோரிக்கையில் எதை நாங்கள் வைக்கவேண்டும் என்பது சம்பந்தமாகதான் இன்றைய கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது. இதுவரை மூன்று தீர்மானங்கள் இலங்கை அரசாங்கத்தின் அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30/1 என்ற தீர்மானம், 2017 மார்ச்சிலே 34/1 என்ற தீர்மானம், 2019 மார்ச்சிலே 40/1 என்கின்ற தீர்மானம் என்பனவாகும்.

இனிமேல் எடுக்கப்படுகின்ற தீர்மானம் ஒரு புதிய தீர்மானமாக இருக்க வேண்டும். அது ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலின் மேற்பார்வையைத் தக்கவைத்துக் கொள்வதாக இருக்க வேண்டும் என்கின்ற பொதுவான நிலைப்பாடு ஒன்று இருக்கின்றது.

ஆனாலும் இந்த மூன்று தீர்மானங்களும் எமது மக்களிற்கு நீதியை பெற்றுக்கொடுப்பதிலே வெற்றி காணவில்லை. ஆகையினாலே இதைவிட வீரியமான செயற்பாடு திறன் உள்ள தீர்மானமாக நிறைவேற்றப்பட வேண்டும் என்கின்ற கருத்தும் எல்லோரிடமும் இருக்கின்றது.

அத்தகைய ஒரு கோரிக்கையை சேர்ந்து முன்வைக்க வேண்டும் என்கின் கருத்தும் பொதுவாக இருக்கின்றது. அதற்கு மாறாக இன்னுமொரு கருத்தும் நிலவியது. ஜெனிவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்த விவகாரம் இருக்குமளவும் இதை இன்னொரு தளத்திற்கு கொண்டு செல்வது கஷ்டமாக இருக்கும். ஆகையினாலே ஜெனிவாவிலிருந்து இந்த விவகாரத்தை கைவிட்டுவிட வேண்டும், சர்வதேச நீதிமன்ற பொறிமுறை போன்றவற்றுக்குள் போவதற்கான பொறிமுறையை நாட வேண்டும் என்ற ஒரு கருத்தும் நிலவுகின்றது.

எது, எப்படியாக இருந்தாலும் அனைத்து தரப்பினுடைய கருத்துக்களையும் செவிமடுத்து - விசேடமாக பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்களுக்கு விசேடமாக செவிமடுத்து - இதை அணுகுகின்ற முறை எப்படியானது என்பதை குறித்து தீர்மானங்களை எடுப்பதற்கும், சேர்ந்த கலந்துரையாடுவதற்கும் ஒரு சிறிய குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கின்றது. அந்த குழு தாமதமாகாமல் வரப்போகும் ஓரிரு நாள்களிற்குள் சந்தித்த அடுத்தடுத்த நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானிக்க இருக்கிறது. - என அவர் குறிப்பிட்டார்.

'இம்முறை ஜெனிவா அமர்வுக்கு பொதுவான நிலைப்பாட்டை எடுத்துள்ளீர்கள். கடந்த காலங்களில் தனித்தனியாக சென்றமை பலவீனமானதாக காணப்பட்டதாகக் கருதலாமா?' - என சுமந்திரனிடம் ஊடகவியலாளர் வினவினார். பதிலளித்த சுமந்திரன் -

அது பலவீனமானதற்கு அப்பால், இன்றைக்கு இலங்கையில் உள்ள அரசாங்கம் மிகப் பலம் பொருந்திய நிலையில் உள்ள அரசாங்கம். எங்களுக்கு நீதியை மறுப்பதிலே முனைப்பாக இருக்கின்ற அரசாங்கம். ஆகையினாலே அப்படியான அரசாங்கத்தை கொண்டிருக்கின்ற நாங்கள் எண்ணிக்கையிலும் சிறுபான்மையினராக இருக்கின்றோம், பலத்திலும் குறைவானவர்களாக இருக்கின்றோம். குறைந்தது நாங்கள் ஒன்றாக நின்றாலாவது எங்களுக்கு உள்ளே பலத்தை கூட்டிக்கொள்ளலாம் என்கின்ற நம்பிக்கையிலேதான் இன்றைக்கு இந்த சந்திப்பு நடந்திருக்கின்றது. - என்றார்.

இன்றைய கலந்துரையாடலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கலந்து கொள்ளாமை தொடர்பிலும் அவரிடம் வினவப்பட்டது.

இன்றைய கூட்டத்தினை அவர்கள் புறக்கணித்தனர் எனச் சொல்லப்படவில்லை. வரவிருந்தவருக்கு வேறு வேலை இருந்ததாகதான் சொல்லப்பட்டிருந்தது. ஆகவே அந்த கட்சியில் ஒருவரைத் தவிர கூடுதலான ஆள்கள் இருக்கின்றார்கள் என்றுதான் நாங்கள் நம்புகிறேன். ஒருவர் வரமுடியாவிட்டாலும் இன்னொருவரையாவது அனுப்பியிருக்கலாம். ஆனாலும் அடுத்த கூட்டத்துக்கு வருவார்கள் என்று நம்புகின்றோம். அனைவரோடும் பயணிப்பதுதான் நல்லது. அடுத்தடுத்த கட்டங்களில் பேசி தீர்மானிப்போம். - என அவர் குறிப்பிட்டார்.

(8 ஆம் பக்கமும் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைவில் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தி உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோனால் அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்பட்டுள்ள யோசனை தொடர்பாக இந்தக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதன்போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்று நிலைமையில், தேர்தலை இப்போதைக்கு நடத்துவதில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பாகக் கட்சித் தலைவர்கள் சிலர் கருத்துக்களை முன்வைத்துள்ளனர்.

இதேவேளை, அவசரமாக தேர்தலை நடத்தாது, புதிய அரசமைப்பு தயாரிக்கப்பட்ட பின்னர் தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேலும் சிலர் குறிப்பிட்டுள்ளனர் என்று அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் இந்தக் கூட்டத்தில் தேர்தலை எப்போது நடத்துவது என்பது தொடர்பாக தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை எனவும், இது தொடர்பாக மீண்டும் கலந்துரையாடுவதற்கு முடிவு செய்யப்பட்டது எனவும் எஸ்.எம்.சந்திரசேன அவர் மேலும் கூறினார்.

## 'கொரோனா'விலிருந்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 7 ஆயிரத்து 484 பேருக்குத் தொடர்ந்தும் சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. கொரோனாவால் இதுவரை 194 பேர் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## தமிழர் பக்கத்து நியாயம்

**புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான யோசனைகள் சமர்ப்பிக்கப்படும் சூழலில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய சர்ச்சைகளும், விவாதங்களும் கூட தலைதூக்க முனைகின்றன.**

**நேரடியாகப் பிரிவினை என்ற கோரிக்கையை முன்வைக்க முடியாத சிக்கலில் – சட்ட இக்கட்டில் – மாட்டியிருக்கும் தமிழர் தரப்பு, சர்வதேச சட்டச் சொல்லாடல்களுக்கு அமைவான சொற்பதங்கள் மூலம் தமது உரிமைக் கோரிக்கையை வலுவாக முன்வைக்க முயல்கின்றன.**

**தனித்துவமான மக்கள் கூட்டம் என்ற முறையில் தங்களுக்குத் தனியான உள்ளக – வெளிப்புற சுயநிர்ணய உரிமை இருக்கின்றது என்று தமிழர்கள் வாதிடுவதும் –**

**ஒரு நாட்டுக்குள் தனியான சுயநிர்ணய உரிமையை ஒரு தரப்பினர் கோருவது ஒரு தனித்துவமான நாடு என்ற முறையில் தனது ஆள்புல ஒருமைப்பாட்டுக்கும் இறைமைக்கும் விடுக்கப்படும் சவால் என்று கொழும்பு அரசு சந்நதம் கொள்வதும் –**

**இனிமேல், தொடர் வாதப் பொருளாக நீடிக்கப் போகின்றன.**

**தமிழர்களின் இந்த சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை பல தசாப்தங்களாக நீடித்து வருவது.**

**இலங்கையில் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசு ஒன்று 2001 டிசெம்பர் 5 ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் தெரிவானது. அந்த அரசுடன் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகள் சமரசத் தீர்வுக்கான அமைதி முயற்சிகளில் ஈடுபட்டனர். அச்சமயம் – 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் – தமது மாவீரர் தின உரையில் இவ்விடயத்தில் தமிழர் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தார் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன்.**

***"தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணில், வரலாற்று ரீதியாக வாழ்ந்து வரும் பாரம்பரிய தாயகத்தில், அந்நிய சக்திகளின் ஆதிக்கம், தலையீடு இன்றி, சுதந்திரமாக, கௌரவமாக வாழ விரும்புகின்றார்கள். தமது மொழியை வளர்த்து, தமது பண்பாட்டை பேணி, தமது பொருளாதாரத்தை மேம்படுத்தி, தமது இன அடையாளத்தைப் பாதுகாத்து, வாழ விரும்புகின்றார்கள். தமது தாயக மண்ணில் தம்மைத் தாமே ஆளும் சுயாட்சி உரிமையோடு வாழ விரும்புகின்றார்கள். இதுவே எமது மக்களின் அரசியல் அபிலாஷை உள்ளக சுயநிர்ணய உரிமையின் அர்த்த பரிமாணம் இதில்தான் அடங்கியுள்ளது".*** **– என்றார் அவர்.**

**இந்த நிலைப்பாடு பிரபாகரனுடையது மட்டுமல்ல, ஒவ்வொரு ஈழத் தமிழனினதும் கருத்தியலும் கூட அதுதான். அன்றும் இன்றும் அதுதான்.**

**இன்றைய தமிழ்த் தேசிய அரசியல் தலைவர்களான சம்பந்தன், சுமந்திரன் முதற்கொண்டு கஜேந்திரகுமார், நீதியரசர் விக்னேஸ்வரன் வரை எல்லோரதும் கருத்தியல் நிலைப்பாடும் இதுதான்.**

**இந்தக் கோரிக்கை ஒரு நாடு என்ற முறையில் இலங்கையின் ஆள்புல ஒருமைப்பாட்டை – இறைமையை – மீறுவதாயின் அதனை எப்படி தமிழர் தரப்பு முற்கொண்டு செல்ல இயலும்? அதில் யாது நியாயம் இருக்க முடியும்?**

**இந்தக் கேள்விகளுக்கு விடை காண குடியேற்ற நாட்டு மக்களின் அரசியல் சுதந்திரத்துக்கான தகைமையை நிர்ணயிப்பதற்கு வழி செய்யும் விதத்தில் ஐ.நாவினால் 1970 இல் மேற்கொள்ளப்பட்ட 'அரசுகள் மத்தியில் நல்லுறவையும் ஒத்துழைப்பையும் நிலைநாட்டுவது பற்றிய சட்ட விதிகள்' என்ற பெயரில் வெளியிடப்பட்ட சட்டப் பிரகடனத்தை நாம் நோக்க வேண்டும்.**

***"ஐ.நா. சாசனத்தில் பொறிக்கப்பட்டிருக்கும் 'சம உரிமைகளும் மக்களது சுயநிர்ணயமும்' என்ற விதிக்கு இணங்க, எல்லா மக்களும் (மக்கள் கூட்டத்தினரும்) வெளிப்புறத் தலையீடு ஏதுமின்றி, தமது அரசியல் தகைமையைச் சுதந்திரமாகத் தீர்மானிப்பதற்கும், தமது பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சியைப் பேணுவதற்கும் உரிமை உடையவர்களாவர். இந்தச் சாசனத்தின் கட்டுப்பாடுகளுக்கு அமைய ஒவ்வொரு அரசும் இந்த உரிமைக்கு மதிப்பளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றது."*** **என்று அந்த ஐ.நா. பிரகடனம் எடுத்தியம்புகின்றது.**

**எனினும், சுதந்திரமான, இறையாண்மையுடைய அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையையும் இப் பிரகடனம் உறுதிப்படுத்துகின்றது. அதனைத்தான் இலங்கை அரசு இன்று தன்னுடைய நியாயமாக – தமிழர்களின் கோரிக்கைக்கு மாறான – தனது பக்கக் கருத்தியலாக முன்வைக்கின்றது.**

**ஆனால், அப்படி பிரதேச ஒருமைப்பாட்டு உரிமையை வலியுறுத்தும் அரசுகள் சில தகைமைகளை – தேவைப்பாடுகளை – கடப்பாடுகளை – நிறைவு செய்ய வேண்டும் என்றும் அந்த ஐ.நா. சாசனம் வலியுறுத்துகின்றது.**

**அதாவது, எல்லா மக்களுக்கும் சம உரிமைகளையும், சுயநிர்ணய உரிமைகளையும் வழங்கி, இன, மத வேறுபாடின்றி அந்நாட்டில் உள்ள மக்கள் சமூகத்தினர் அனைவரையுமே பிரதிநிதித்துவப்படுத்தும் ஓர் அரசுக்கு மட்டுமே பிரதேச ஒருமைப்பாட்டை வலியுறுத்தும் தகுதியும், தகைமையும், உரிமையும் உள்ளது என்கின்றது ஐ.நாவின் அந்தப் பிரகடனம்.**

**இந்த வலியுறுத்தலின் கீழ் இலங்கை அரசின் உரிமைக் கோரிக்கை தகுதியற்றதாகி விடுகின்றது. ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை மேலும் வலிமை பெற்று விடுகின்றது.**

## பாடசாலைக்கு இரண்டு பிரிவுகளாக மாணவர்களை அழைக்க யோசனை!



எதிர்வரும் ஜனவரி மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஆரம்ப பிரிவு பாடசாலைகளில் மாணவர்களை இரண்டு பிரிவுகளாக பாடசாலைகளுக்கு அழைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாக நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற செய்தியாளர்களுடனான சந்திப்பில் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதன்படி மாணவர்கள் மத்தியில் தனிப்பட்ட இடைவெளியை முன்னெடுப்பதற்காக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பான வேலைத்திட்டம் இன்னும் சில தினங்களில் அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் நலன்கருதியே முறையான திட்டமிடலுக்கு அமைவாகவே, ஜனவரி மாதம் 11ஆம் திகதி பாடசாலைகளை திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், இது உடனடியாக எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல என்றும் கூறியுள்ளார்.

விசேட வைத்திய நிபுணர்களின் ஆலோசனைகளும் இதற்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் குறுகிய அரசியல் நோக்கில் இதுபற்றி கவனம் செலுத்தக்கூடாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாடசாலைகளை திறக்குமாறு பெற்றோர் நாளாந்தம் கோரிக்கை விடுத்து வருகிறார்கள் என்றும் பாடசாலைகளுக்கான சுகாதார உபகரணங்களை வழங்குவதற்கென அரசாங்கம் ஆயிரத்து 50 லட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இரணைமடு குளத்தின் கீழ்பகுதியிலுள்ள மக்களுக்கு வெள்ள முன்னெச்சரிக்கை!

கிளிநொச்சி இரணைமடு குளத்தின் கீழ் பகுதியிலுள்ள மக்களுக்கு வெள்ள முன்னெச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வரத்து நீர் மற்றும் மழையைக் கருத்தில் கொண்டு, இரணைமடு குளத்தின் இரண்டு வான் கதவுகள், இன்று பகல் 12 மணிக்கு, 6 அங்குலங்கள் திறக்கபட்டன என நீர்ப்பாசன திணைக்களம் அறிவித்துள்ளது.

மேலும் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை அளவின் அடிப்படையில், மேலும் நீரின் அளவு அதிகரிக்கலாம் எனவும் மக்களை விழிப்புடன் இருக்குமாறும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு அறிவுறுத்தி உள்ளது.

அதற்கு அமைவாக, பன்னங்கண்டி, முரசுமோட்டை, சிவபுரம், கண்டாவளை, ஊரியான் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள மக்களை அவதானத்துடன் செயற்படுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

## பெரமுனவின் ஆளுகைக்குட்பட்ட மற்றுமோர் பட்ஜெட் தோற்கடிப்பு!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வசமுள்ள மற்றுமொரு பிரதேச சபையின் வரவு – செலவுத் திட்டமும் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ருவன்வெல்ல பிரதேச சபையின் வரவு செலவு திட்டமே தோற்கடிக்கப்பட்டுள்ளது.

வரவு செலவு திட்டத்திற்கு எதிராக 17 வாக்குகளும் ஆதரவாக 11 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

ஐக்கிய தேசிய கட்சியின் 9 பேர், சமசமாஜ கட்சியின் 3 உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2 உறுப்பினர்கள், ஜே.வி.பி மற்றும் சுயாதீன குழு உறுப்பினர்கள் என 17 பேர் எதிர்த்து வாக்களித்துள்ளனர்.

மேலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெண் உறுப்பினர் ஒருவரும் சுதந்திர கட்சியின் ஓர் உறுப்பினரும் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

அத்துடன் பிரதேச சபை உப தலைவர் கூட வரவு – செலவுத் திட்டத்திற்கு எதிராகவே வாக்களித்தார் எனக் கூறப்படுகிறது.

இதேவேளை அண்மைய நாள்களாக பொதுஜன பெரமுனவின் கட்டுப்பாட்டில் உள்ள பல உள்ளூராட்சி சபைகளின் வரவு – செலவுத் திட்டங்கள் தோல்வி அடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தெனியாயவில் கோர விபத்திலிருந்து தெய்வாதீனமாகத் தப்பிய வைத்தியர்!

தெனியாய பிரதேசத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு 10.30 மணியளவில் வைத்தியர் சென்ற கார் 80 அடிக்கு மேற்பட்ட பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியது.

தெனியாய விஹாரஹேன பிரதேசத்தில் இருந்து தெனியாய நோக்கி பயணித்த காரே விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த காரில் தெனியாய வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் இருந்தார் எனவும் வைத்தியர் சிறு காயங்களுடன் அதிஷ்டவசமாக தப்பியுள்ளார் எனவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.



கார் பலத்த சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் பலர் நாடு வந்தடைந்தனர்

கொரோனா வைரஸ் தொற்று காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 108 இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தை இன்று (செவ்வாய்க்கிழமை) காலை வந்தடைந்தனர்.

அதன்படி கட்டாரிலிருந்து 83 பேர், அபுதாபியிலிருந்து 13 பேர், மாலைதீவிலிருந்து 12 பேர் நாட்டை வந்தடைந்தனர் என தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு பின்னர் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம், மேலும் உக்ரைனிலிருந்து 160 பேர், துருக்கியிலிலிருந்து 04 பேர், இந்தோனேசியாவிலிருந்து 03 பேர், டுபாயில் இருந்து 22 பேர் இன்று இந்நாட்டிற்கு வருகை தரவிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## சமூக நல அறிவிப்பு

# இந்த கொரோனா இடர் காலத்தில் உங்களுடைய மனநலனைக் கவனித்துக்கொள்ள நீங்கள் செய்ய வேண்டிய சில விடயங்கள்:-





நல்ல நடைமுறையொழுங்குகளைப் பின்பற்றுங்கள் ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி மற்றும் தூக்கம் போன்றவை அவசியம்.

உங்களுடைய அன்பிற்குப் பாத்திரமானவர்களுடன் தொடர்பில் இருங்கள். தொலைபேசி அல்லது இணையவழித் தொழில்நுட்பம் (technology) மூலமாக அவர்களுடன் உங்களுடைய கவலைகள் மற்றும் கரிசனங்களைப் பற்றிப் பேசுங்கள்.

போதுமான அளவு உணவுப்பொருள்கள் மற்ற பொருள்கள் மற்றும் மருந்துகள் ஆகியன உங்களிடம் இருப்பதை உறுதிப்படுத்திக்கொண்டு ஆயத்தமாக இருங்கள்.

தேவையெனில், இந்தப் பொருள்களைப் பெறுவதில் உதவியை நாடுங்கள்.

புதிய செய்திகளின் காரணமாக மன அழுத்தத்திற்கு ஆளானால், செய்திகள் கேட்பதை ஒரு நாளைக்கு ஒரு முறை அல்லது இரு முறையெனக் குறைத்துக் கொள்ளுங்கள்.

சமூக ஊடகங்களை விட நம்பகமான செய்தி மூலங்களைப் பயன்படுத்துங்கள்.

உங்களால் இணைய வசதியை அடைய இயலவில்லை என்றால், மிகச் சமீபத்திய நம்பிக்கைக்குரிய தகவல்களை வாசித்துக்காட்டுமாறு அல்லது காண்பிக்குமாறு நண்பர் அல்லது குடும்ப அங்கத்தினரைக் கேளுங்கள்.

**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**


பசுமை
PASUMAI

## பசுமை உயிரியல் கூட்டுப்பசளை

பச்சை இலைகள், தாவர கழிவுகள், கரி ஆகிய மூலப்பொருட்களால் தயாரிக்கப்பட்டது.
விலங்குக் கழிவுகள் அற்றது.
சாதாரண கூட்டுப்பசளைகளை விட மிக மிக அதிகமான நுண்ணுயிரிகளையும் தாவர போசனை மூலகங்களையும் தன்னகத்தே கொண்டது.



போசனை உள்ளடக்கம்:

| | | |
|---|---|---|
| சேதன காபன் | 25.7 | 25% |
| நைதரசன் (தழைச்சத்து) N | 2.0 | 3.5% |
| பொஸ்பரஸ் (மணிச்சத்து) P | 0.5 | 1.0% |
| பொட்டாசியம் (சாம்பல்சத்து) K | 0.2 | 0.6% |

Ca, Mg, Mn, Zn, Fe, Cu ஏனையவற்றுடன் ஏனைய தாவர நுண் போசனை மற்றும் போசனை மூலகங்கள்

உற்பத்தி ஆதரவு
சார பூமி லங்கா - உயிரி உற்பத்தி நிறுவனம்
ஆராய்ச்சி ஆய்வுகூடம், கண்டி.

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

021 492 7778 pasumailanka@gmail.com www.pasumai.lk facebook.com/pasumaiagri

# திபெத்தின் புதிய தலாய்லாமாவை தெரிவு செய்வதற்கு சீனத் தலையீட்டை தடுக்கும் சட்டத்தில் ட்ரம்ப் ஒப்பம்!



திபெத்தின் புதிய தலாய்லாமாவை தெரிவு செய்வதில் சீனாவின் தலையீட்டை தடுக்கும் ஒரு சட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

சீனாவின் கடும் எதிர்ப்புக்கு மத்தியில் 'திபெத் கொள்கை மற்றும் ஆதரவு சட்டம் 2020' என்கிற சட்ட மூலம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் கடந்த வாரம் தாக்கல் செய்யப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து இந்த சட்டமூலம் ஜனாதிபதி ட்ரம்ப்பின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தச் சட்டமூலத்தில் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் நேற்று (திங்கட்கிழமை) கையெழுத்திட்டார்.

இந்த சட்டத்தின் முக்கிய நோக்கம் திபெத்தின் அடுத்த தலாய்லாமாவை சீனாவின் குறுக்கீடு இல்லாமல் புத்த சமூகத்தினர் மட்டுமே தேர்வு செய்வதை உறுதிப்படுத்துவதாகும்.

இதற்காக ஒரு சர்வதேச கூட்டணியை கட்டியெழுப்ப இந்தச் சட்டம் வலியுறுத்துகிறது. இந்த சட்டம் திபெத் தொடர்பான பல்வேறு திட்டங்கள் மட்டும் விதிகளை மாற்றி அமைத்து மறு அங்கீகாரம் வழங்குகிறது.

மேலும் இந்த புதிய சட்டம் திபெத்தின் லாசா நகரில் அமெரிக்க தூதரகத்தை நிறுவுவதற்கு வழிவகுக்கிறது. அதன்படி திபெத்தில் ஓர் அமெரிக்க தூதரகத்தை திறக்க சீனா அனுமதிக்காவிட்டால் அமெரிக்காவில் ஒரு புதிய சீன தூதரகத்தை திறக்க முடியாது என அந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் திபெத் விவகாரங்களுக்கான அமெரிக்க சிறப்பு ஒருங்கிணைப்பாளரின் அலுவலகத்துக்கு இந்தச் சட்டம் அங்கீகாரம் அளிக்கிறது.

அதேபோல் திபெத்தின் தலாய்லாமாவை தெரிவு செய்வதில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தலையிடும் சீன அரசாங்கத்தின் அல்லது சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரிகள் மீது பொருளாதாரத் தடைகள் உள்ளிட்ட நடவடிக்கைகளை எடுக்க அமெரிக்க அரசுக்கு இந்த சட்டம் அனுமதி வழங்குகிறது.

சீனா கடந்த 1959 ஆம் ஆண்டு திபெத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தது. இதனால் திபெத்தை ஆண்டு வந்த தலாய்லாமா அங்கிருந்து தப்பி இந்தியாவில் அடைக்கலமாகினார்.

3ஆம் நூற்றாண்டிலிருந்து திபெத் தங்கள் நாட்டின் ஓர் அங்கம் என்றும் அது எப்போதும் நிலைத்திருக்கும் என்றும் சீனா கூறி வருகிறது.

ஆனால் திபெத்தை சீனா ஆக்கிரமித்து வைத்துள்ளதாக அமெரிக்கா கூறுகிறது. மேலும் திபெத்தின் மத மற்றும் கலாசார விவகாரங்களில் சீனா தலையிடுவதாக அமெரிக்கா தொடர்ந்து குற்றம் சாட்டி வருகிறது.

எனவே திபெத்தின் சுதந்திரத்துக்காக அமெரிக்கா வலுவான ஆதரவு குரலை எழுப்பி வருகிறது. மேலும் திபெத் விவகாரத்தில் சீனாவுக்கு எதிராக அமெரிக்கா பல்வேறு அதிரடி நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அதே சமயம் திபெத் பிரச்சினையில் தலையிடுவது மூலம் அமெரிக்கா சீனாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக கூறி சீனா தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## கொரோனாத் தொற்றுத் தொடர்பான தகவல்களை உலகுக்கு அறியப்படுத்திய சீன பெண்ணுக்கு சிறை!




கொரோனா வைரஸ் (கொவிட் – 19) தொடர்பான தகவல்களை, சமூகவலைத்தளங்களின் ஊடாக உலகிற்கு அறியப்படுத்திய சீன பெண் வழக்கறிஞருக்கு நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சமூக பத்திரிகையாளர் ஜாங் சான் மீதான வழக்கு நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே ஷாங்காய் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்தது.

37 வயதான ஜாங் சான், 'கொரோனா வைரஸ் தொடர்பாக வெளிநாட்டு ஊடகங்களில் வதந்திகளை பரப்பினார்' என்று அரச தரப்பு வழக்கறிஞர் குற்றம் சாட்டினார்.

ஜாங் சான் தரப்பு வழக்கறிஞர் வாதிட்ட போது, 'உண்மை தகவல்களை மட்டுமே ஜாங் சான் வெளியிட்டார்' என்று விளக்கமளித்தார்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிமன்றம், ஜாங் சானுக்கு 4 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது. அப்போது நீதிமன்றத்தில் இருந்த ஜாங் சான் உரக்க குரல் எழுப்பி கடும் எதிர்ப்பை பதிவு செய்தார். இதற்காக அவருக்கு கூடுதலாக ஓராண்டு சிறை தண்டனை விதிக்கப்பட வாய்ப்புள்ளதாகக் கூறப்படுகின்றது.

கடந்த பெப்ரவரி மாதம் வுஹான் நகருக்கு சென்ற ஜாங்சான், சமூக ஊடகவியலாளராக மாறி கொரோனா வைரஸ் தொடர்பான செய்திகளை சேகரித்தார்.

கொரோனா நோயாளிகளின் அவல நிலை, வைத்தியசாலைகளில் நிரம்பி வழிந்த கூட்டம் தொடர்பான காணொலிகள், செய்திகளை வீசாட், டுவிட்டர், யூடியூப் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் வெளியிட்டார்.


இதனால், வதந்திகளை பரப்பினார் எனக் கடந்த மே மாதம் அவர் கைது செய்யப்பட்டு ஷாங்காய் நகர சிறையில் அடைக்கப்பட்டார்.

கடந்த ஜூன் மாதம் முதல் ஜாங் சான் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டு வருகிறார். சிறை நிர்வாகம் தரப்பில் அவருக்கு குழாய் மூலம் திரவ உணவு செலுத்தப்படுகிறது.

## தென்னாபிரிக்காவில் புதிய கடுமையான கொரோனா கட்டுப்பாடுகள் அறிவிப்பு; மது விற்பனைக்கு தடை!

தென்னாபிரிக்காவில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான கொவிட் – 19 தொற்றுகள் பதிவு செய்யப்பட்ட ஒரு நாளுக்குப் பிறகு, ஜனாதிபதி சிரில் ரமபோசா புதிய கடுமையான கொரோனா வைரஸ் கட்டுப்பாடுகளை அறிவித்துள்ளார்.

இதன்படி, நேற்று முதல் உட்புற மற்றும் வெளிப்புற கூட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. 11 மணி முதல் 6 மணி வரை ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் இருக்கும். மற்றும் மது விற்பனை தடைசெய்யப்பட்டுள்ளது. குறைந்தது ஜனவரி 15ஆம் திகதி வரை இந்த கட்டுப்பாடுகள் நீடிக்கும்.




இதுதொடர்பாக ஜனாதிபதி சிரில் ரமபோசா கூறுகையில் –

தொற்றுநோய்களில் நாடு மிகவும் ஆபத்தான நிலையில் உள்ளன. இதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

புதிய 501. ஐவரஸ் 2 மாறுபாடு இப்போது தென்னாபிரிக்காவில் நன்கு நிறுவப்பட்டுள்ளது. மேலும் சமீபத்திய தொற்றுகளின் அதிகரிப்பு பெரும் எச்சரிக்கைக்கு ஒரு காரணம். – என கூறினார்.

தென்னாபிரிக்காவில் வைரஸின் புதிய, வேகமாக பரவும் மாறுபாடு கண்டறியப்பட்டதாக சமீபத்தில் அதிகாரிகள் உறுதிப்படுத்தினர்.

சில வைத்தியசாலைகள் மற்றும் மருத்துவ மையங்கள் சேர்க்கைகளில் பெரும் உயர்வு இருப்பதாகக் கூறியுள்ளன.

## அரச நிதியுதவி சட்டமூலத்தில் கையெழுத்திட்டுள்ளார் ட்ரம்ப்!



கொவிட் – 19 நிவாரணம் மற்றும் அரசாங்க நிதியுதவி சட்டமூலத்தில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ளார்.

பல நாட்கள் இழுத்தடிப்புக்கு பிறகு கடந்த ஞாயிற்றுக்கிழமை) மாலை மார்–எ–லாகோவில் இந்த சட்டமூலத்தில் ட்ரம்ப் கையெழுத்திட்டார்.

அமெரிக்காவில் கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிதியுதவி வழங்கவும், அரசாங்க நிறுவனங்களுக்குப் புத்துயிரூட்டத் தேவையான நிதியை வழங்கவும் 2.3 டிரில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்வதற்கான ஆணையே இதுவாகும்.

எனினும், சில செலவு ஏற்பாடுகள் தொடர்பாக அவர் முறைப்பாடு தெரிவித்தமையையடுத்து, நேரடி கொவிட் – 19 கொடுப்பனவுகள் ஒருவருக்கு 600 டொலர்கள் மட்டுமே என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

எனினும் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டிருந்த 600 டொலர்களை, இரண்டாயிரம் அமெரிக்க டொலர்களாக அதிகரிக்கும்படி ட்ரம்ப் வலியுறுத்தியிருந்தார்.

கல்யாணமாலை
வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**
பிறந்த திகதி - 1975.05.19
மதம் - இந்து V
நட்சத்திரம் - ஆயிலியம் 3
செவ் - 4இல்
பாவம் - 8.5
கல்வி - CIMA
தொழில் - கணக்காளர்
எதிர்பார்ப்பு - படித்த பட்டதாரி

**மணமகள் விவரம்**
பிறந்த திகதி - 1989.01.02
மதம் - இந்து V
நட்சத்திரம் - சுவாதி
பாவம் - 17 1/2
சூ/செவ் - 10இல்
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor & Engineer

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.
க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
077 3434 415
077 8578 528

அமரர் பேனாட் மதுரநாயகம் நினைவுக்
கவிதைப் போட்டி
போட்டி 2 பிரிவுகளாக நடைபெறும்
1. பாடசாலை மாணவர்களுக்கானது (தரம் 1 முதல் 12 வரை)
"கை கழுவினார்கள்....."
2. பெரியவர்களுக்கானது (வயது எல்லை கிடையாது)
"முகத்தின் முகவரிகளைத் தொலைத்தோம்....."

பரிசுத் தொகை:

| பாடசாலை மணவர்களுக்கு | பெரியவர்களுக்கு |
|---|---|
| 1ம் பரிசு – 3000/= | 1ம் பரிசு – 5000/= |
| 2ம் பரிசு – 2000/= | 2ம் பரிசு – 3000/= |
| 3ம் பரிசு – 1000/= | 3ம் பரிசு – 1000/= |

- 30 வரிகளுக்கு உட்பட்டதாக இருத்தல்.
- புதுக்கவிதையாக / மரபுக்கவிதையாக இருக்கலாம்
- நிச்சயம் சுயமாக வரைந்த, தனது சொந்த கையெழுத்துடன்
- அனுப்பிவைக்க வேண்டும்.

நோக்கம் : -
காலச் சூழ்நிலையில் விடுமுறைப்பொழுதில் மனதை ஒருமுறை மகிழ்விக்க
இறுதித் திகதி: - 31.12.2020
போட்டி முடிவுகள் 14.01.2021 பொங்கல் தினத்தன்று காலைக்கதிர் பத்திரிகையில் வெளியிடப்படும்.
உங்கள் ஆக்கங்களை எமக்கு தபால் மற்றும் மின்னஞ்சல் ஊடாக அனுப்பிவைக்கவும்.

ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி
தபால் :-
அமரர் பேனாட் நினைவுக் கவிதைப்போட்டி
காலைக்கதிர்
இல. 30, கல்லூரி வீதி,
யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் :- kalaikkathiradvt@gmail.com

# விரைவில் வருகின்றது தடுப்பூசி பாஸ்போர்ட்

புதுடில்லி, டிசெ.29

பல நாடுகளில் இனி பொது இடங்கள், கேளிக்கை நிகழ்ச்சிகள், பொழுதுபோக்கு கூடங்கள் போன்றவற்றிற்குச் செல்ல 'தடுப்பூசி பாஸ்போர்ட்' முறை அமுலுக்கு வர உள்ளது.

உலகளவில் கொரோனாவால் எட்டு கோடிக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளனர் 17.60 லட்சம் பேர் இறந்துள்ளனர். முகக்கவசம் அணிவது சமூக இடைவெளியை கடைப்பிடிப்பது கிருமி நாசினியால் கைகளை கழுவுவது போன்றவை கொரோனா பரவலை தடுக்க உதவுகின்றன. 'பைஸர் ஆஸ்ட்ராஜெனகா' உள்ளிட்ட பல நிறுவனங்கள் கொரோனாவுக்கு தடுப்பூசி கண்டுபிடித்துள்ளன. பிரிட்டன், ரஷ்யா ஆகியவை மக்களுக்கு கொரோனா தடுப்பூசி போட்டு வருகின்றன. இதையடுத்து தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களுக்காக பல நிறுவனங்கள் 'தடுப்பூசி பாஸ்போர்ட்' என்ற சான்றிதழ்களை வழங்க உள்ளன.

இந்தவகையில் 'கொமன் டிரஸ்ட் நெட்ஓர்க்' என்ற நிறுவனம் 'கொமன்பாஸ் ஒவ்' என்ற அலைபேசி செயலியை உருவாக்கியுள்ளது. கொரோனாவால் பாதிக்கப்பட்டு குணமடைந்தோர் மற்றும் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்கள் இந்த செயலியில் தங்கள் சிகிச்சை விவரங்களை அளிக்கலாம் அவர்களுக்கு 'கியூஆர் கோடு' தொழில்நுட்பத்தில் 'தடுப்பூசி பாஸ்போர்ட்' என்ற சான்றிதழ் வழங்கப்படும். அதை



அலைபேசியில் பதிவிறக்கிக் கொள்ளலாம். இந்த சான்றுடன் வருவோரை பொது இடங்கள், பொழுதுபோக்கு கூடங்கள், திரையரங்குகள், தொழிற்சாலைகள் ஆகியவற்றில் அனுமதிக்க பல நாடுகள் திட்டமிட்டுள்ளன. இதன் வாயிலாக மக்களின் சுகாதார பாதுகாப்பை சுலபமாக உறுதி செய்து கொள்ள முடியும்.

'கத்தாய் பசிபிக் விர்ஜின் அட்லாண்டிக்' உள்ளிட்ட பல விமான நிறுவனங்கள் தடுப்பூசி பாஸ்போர்ட் நடைமுறைக்காக க்ல்மன் டிரஸ்ட் நெட்ஓர்க் நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்துள்ளன. ஐ.பி.எம். நிறுவனமும் 'டிஜிட்டல் ஹெல்த் பாஸ்' என்ற அலைபேசி செயலியை உருவாக்கியுள்ளது.

இதில் கொரோனா பரிசோதனைகள் உடல் வெப்பம் உள்ளிட்ட தகவல்களை அறியலாம். பல நாடுகள் தடுப்பூசி பாஸ்போர்ட் வைத்திருக்கும் வெளிநாட்டு பயணியரை அனுமதிக்கத் திட்டமிட்டுள்ளன.

## தொடரும் விவசாயிகளின் போராட்டம் நாளை மத்திய அரசுடன் நேரடிப் பேச்சு

புதிய வேளாண் சட்டங்கள் தொடர்பாக பேச்சுக்கு வருமாறு மத்திய அரசு விடுத்த அழைப்பை, விவசாயிகள் சங்கங்கள் ஏற்றுக் கொண்டுள்ளன.

டெல்லி அருகே 40க்கும் மேற்பட்ட விவசாய சங்கங்கள் நடத்தி வரும் போராட்டம் 34 ஆவது நாளாக நீடித்து வருகிறது. மத்திய அரசுடன் நடைபெற்ற 5 கட்ட பேச்சுத் தோல்வி அடைந்த நிலையில், நாளை பேச்சுவார்த்தைக்கு வருமாறு மத்திய அரசு அழைப்பு விடுத்துள்ளது.

இதனை ஏற்றுக் கொண்டுள்ள விவசாயிகள், நாளை நடைபெறும் பேச்சுவார்த்தையில் இடம்பெறும் அம்சங்களை அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.



## திருமணத்தை இரத்த தான முகாமாக மாற்றிய தன்னார்வலரின் நடவடிக்கை

ஆந்திர மாநிலம் கிழக்கு கோதாவரியில், திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்கள், மணமக்களின் கோரிக்கையை ஏற்று, மொய்ப் பணத்திற்கு மாறாக இரத்த தானம் வழங்கினர்.

தன்னார்வ தொண்டு நிறுவனத்தில் ஒருங்கிணைப்பாளராக பணியாற்றும் தயா சாகர், தனது திருமணத்துக்கு வருபவர்கள் மொய்ப் பணம் மற்றும் பரிசுப் பொருள்களை வழங்குவதற்கு மாறாக இரத்ததானம் செய்யுமாறு அழைப்பிதழில் குறிப்பிட்டிருந்தார்.

இதையடுத்து, பிட்டாபுரத்தில் நடைபெற்ற




அவரது திருமணத்தில் கலந்து கொண்ட 33 பேர் ரத்ததானம் செய்து மணமக்களை வாழ்த்தினர்.

## கர்நாடக சட்டமேலவை துணை சபாநாயகர் தர்மே கவுடா ரயில் முன் பாய்ந்து தற்கொலை

கர்நாடகாசட்டமேலவையின் துணை சபாநாயகர் தர்மேகவுடா ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் என்ச் கூறப்படும் சம்பவம் குறித்து பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.



கர்நாடக மாநில சட்ட மேலவையில் துணை சபாநாயகராக மதசார்பற்ற ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த தர்மேகவுடா இருந்து வந்தார். நேற்று மாலை தனது வீட்டில் இருந்து காரில் புறப்பட்டுச் சென்ற அவர், வெகு நேரமாகியும் வீடு திரும்பாததால், உறவினர்கள், உதவியாளர்கள் அவரை தேடியுள்ளனர்.

இந்த நிலையில், சிக்கஊரு அருகே கதூர் பகுதியில் தர்மே கவுடா சடலமாக கண்டெடுக்கப்பட்டார். அவர் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார் எனக் கூறியுள்ள பொலிஸார், தற்கொலைக்கு முன் எழுதிய கடிதம் ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர் எனத் தகவல் அளித்துள்ளனர். அதன் அடிப்படையில் விசாரணை நடைபெற்று வருகிறது.

## சசிகலா ஜன. 27இல் விடுதலை மீண்டும் 'ஜெ' சமாதியில் சபதம்



சென்னை,டிசெ.29

சொத்து குவிப்பு வழக்கில் 4 ஆண்டுகள் பெங்களூர் சிறையில் தண்டனை அனுபவித்து வரும் சசிகலா வருகிற ஜனவரி மாதம் 27 ஆம் திகதி விடுதலை ஆவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அவர் ஏற்கனவே 129 நாள்கள் விசாரணையின் போது சிறையில் இருந்துள்ளமையால் அந்தக் காலத்தைத் தண்டனையில் இருந்து கழித்துக்கொள்ள வேண்டும் என அவரது சட்டத்தரணிகள் சார்பில் சிறை நிர்வாகத்திடம் கோரிக்கை வைக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இதுவரை அதற்கு சிறை நிர்வாகத்தில் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை.

இதுகுறித்து சசிகலாவின் வழக்கறிஞர் ராஜா செந்தூர்பாண்டியன் சிறை நிர்வாகத்துக்கு கடிதம் எழுதி இருந்தார்.

அந்த கடிதத்தில் சசிகலா இருக்கும் பரப்பன அக்ரஹார சிறையில் 2017 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை முன் கூட்டியே விடுதலையானவர்களின் பெயர் பட்டியலை உதாரணம் காட்டியுள்ளார்.

மற்றவர்களை முன்கூட்டியே விடுதலை செய்தது போல் சசிகலாவையும் விடுதலை செய்ய வேண்டும் என்று கடிதம் எழுதி இருந்தார்.

ஆனால் அவரது கடிதத்துக்கு சிறைத்துறையில் இருந்து முறையான பதில் எதுவும் வரவில்லை. இதனால் ராஜாசெந்தூர் பாண்டியன் தற்போது மீண்டும் சிறைத்துறை நிர்வாகத்துக்கு கடிதம் எழுதி உள்ளார்.

இதுபற்றி சிறைத்துறையில் அவர் கேட்டதற்கு உங்கள் மனுவை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளோம். பதில் வந்ததும் தகவல் சொல்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

இதுபற்றி ராஜாசெந்தூர் பாண்டியன் மாலைமலர் நிருபரிடம் கூறியதாவது:-

சசிகலா ஜனவரி 27 ஆம் திகதி விடுதலை ஆவார் என்று சிறை நிர்வாகத்தில் இருந்து ஏற்கனவே வெளியில் தகவல் சொல்லி இருக்கிறார்கள்.

ஆனால் நாங்கள் முன் கூட்டியே சசிகலா விடுதலையாவதற்கான சலுகையை எதிர்பார்க்கிறோம். அந்த உரிமையைதான் சிறை நிர்வாகத்திடம் கேட்டு இருக்கிறோம். அதற்கு இதுவரை பதில் இல்லை. இந்த விடயத்தில் அவர்கள்தான் முடிவு செய்து அறிவிக்க வேண்டும். - இவ்வாறு அவர் கூறினார்.

சசிகலா விடுதலையாவதற்கு இன்னும் 29 நாள்கள்தான் உள்ளன. அவர் முன்கூட்டியே விடுதலையாகாவிட்டாலும் ஜனவரி 27 ஆம் திகதி விடுதலையாவது உறுதியாகி உள்ளது. அன்றைய தினம் அவர் விடுதலையானதும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தினர் பிரமாண்டமான வரவேற்பு கொடுக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

பெங்களூரில் இருந்து சென்னை வரை வழிநெடுக 65 இடங்களில் பிரமாண்ட வரவேற்பு கொடுக்க ஏற்பாடுகள் நடந்து வருகிறது.

சசிகலா 2016 ஆம் ஆண்டு சிறைக்கு செல்வதற்கு முன்பு மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்திற்கு சென்றபோது 3 முறை கையால் ஓங்கி அடித்து நினைவிடத்தில் சப்தம் எடுத்து விட்டுதான் ஜெயிலுக்கு புறப்பட்டார்.

அதே போல் ஜனவரி 27 ஆம் திகதி ஜெயிலில் இருந்து விடுதலையாகி வரும்போதும் முதலில் ஜெயலலிதாவின் நினைவிடத்துக்கு சென்று மீண்டும் சபதம் எடுத்து விட்டு தான் வீட்டுக்கு செல்வார் என்று கட்சி நிர்வாகிகள் தெரிவித்து வருகின்றனர்.

அவரது சபதம் அரசியலில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் கூறி வருகின்றனர். சசிகலா மீண்டும் ஜெயலலிதா நினைவிடத்துக்கு சென்று சபதம் எடுக்க இருப்பது அ.தி.மு.க. நிர்வாகிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

## உருமாறிய கொரோனா வைரஸ் தமிழ்நாட்டிலும் கால் பதித்தது!



சென்னை,டிசெ.29

உருமாறிய கொரோனா வைரஸ் முதன்முதலில் பிரிட்டனில் பரவியது. இந்த உருமாறியவைரஸ்பழையகொரோனா வைரஸை விட மிகவும் வேகமாக பரவுவது ஆய்வில் தெரிய வந்துள்ளது. இதனால், பிரிட்டனுடனான விமானப் போக்குவரத்தை இந்தியா உட்பட பல நாடுகள் தடை செய்தன.

இதற்கிடையில், பிரிட்டனில் இருந்து இந்தியா வந்தவர்களில் 116 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டு வந்தது. அவர்களுக்கு உருமாறிய கொரோனா தான் பரவியுள்ளதா என்பதை கண்டறிய அவர்களது பரிசோதனை மாதிரிகளை இந்திய மருத்துவ ஆராய்ச்சி மையம் (ஐ.சி.எம்.ஆர்.) ஆய்வுகளை மேற்கொண்டது.

இந்நிலையில், இந்தியாவில் பிரிட்டனில் இருந்து இந்தியா வந்தவர்களில் 6 பேருக்கு உருமாறியகொரோனாவைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக ஐ.சி.எம்.ஆர். இன்று தெரிவித்துள்ளது.

இதையடுத்து தமிழகத்தில் ஒருவருக்கு உருமாறிய கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை செயலாளர் ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் இருந்து தமிழகம் வந்தவர்களில் இதுவரை 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அதில் ஒருவருக்கு உருமாறிய கொரோனா வைரஸ் உறுதியாகியுள்ளது. அவருக்கு தனி அறையில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

கொரோனா தொற்று உறுதியானவர்களுடன் தொடர்பில் இருந்த அனைவருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. உருமாறிய கொரோனா பாதித்தவருடன் தொடர்பில் இருந்த 15பேருக்கு கொரோனா இல்லை.

தமிழகத்தில் உருமாறிய கொரோனா வைரஸ் பரவ வாய்ப்புகுறைவாகவேஉள்ளது.

# அரசியலுக்கு வர முடியவில்லை! .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக ரஜினிகாந்த் இன்று தனது ருவிட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

என் உயிர் போனாலும் பரவாயில்லை. நான் கொடுத்த வாக்கை தவறமாட்டேன். நான் அரசியலுக்கு வருவேன் என்று சொல்லி இப்போது அரசியலுக்கு வரவில்லை என்று சென்னால் நாலு பேர் நாலுவிதமாக என்னைப் பற்றி பேசுவார்கள் என்பதற்காக என்னை நம்பி என் கூட வருபவர்களை நான் பலிக்கடா ஆக்க விரும்பவில்லை.

ஆகையால் நான் கட்சி ஆரம்பித்து, அரசியலுகு வர முடியவில்லை என்பதை மிகுந்த வருத்ததுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதை அறிவிக்கும்போது எனக்கு ஏற்பட்ட வலி எனக்கு மட்டும்தான் தெரியும். இதனால், ரஜினிகாந்த் அரசியல் கட்சி தொடங்குவாரா? என்ற கேள்விக்கு இல்லை என்ற பதில் கிடைத்துள்ளது - என்றுள்ளது.

ரஜினி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

என்னை வாழவைக்கும் தெய்வங்களான தமிழக மக்களுக்கு எனது அன்பான வணக்கம். ஜனவரியில் கட்சி தொடங்குவேன் என்று அறிவித்து மருத்துவர்களின் அறிவுரையையும் மீறி ‘அண்ணாத்த’ படப்பிடிப்பில் கலந்துகொள்ள ஐதராபாத் சென்றேன்.

கிட்டத்தட்ட 120 பேர் கொண்ட படக் குழுவினருக்கு தினமும் கொரோனா பரிசோதனை செய்து ஒவ்வொருவரையும் தனிமைப்படுத்தி, முகக் கவசம் அணிவித்து, மிகவும் ஜாக்கிரதையாக படப்பிடிப்பை நடத்தி வந்தோம்.

இவ்வளவு கட்டுப்பாட்டோடு இருந்தும் 4 பேருக்குக் கொரோனா இருக்கின்றது என்று தெரியவந்தது. உடனே இயக்குநர் படப்பிடிப்பை நிறுத்தி நான் உட்பட அனைவருக்கும் கொரோனா பரிசோதனை செய்வித்தார்.

எனக்குக் கொரோனா நெகடிவ் வந்தது. ஆனால், எனக்கு இரத்தக் கொதிப்பில் அதிக ஏற்றத் தாழ்வு இருந்தது. மருத்துவ ரீதியாக எக்காரணத்தைக் கொண்டும் எனக்கு இரத்தக் கொதிப்பில் தொடர்ந்து ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது. அது என்னுடைய மாற்று சிறுநீரகத்தைக் கடுமையாக பாதிக்கும்.

ஆகையால் என்னுடைய மருத்துவர்களின் அறிவுரைப்படி அவர்களின் மேற்பார்வையில் மூன்று நாட்கள் மருத்துவமனையில் கண்காணிப்பில் இருக்க நேரிட்டது,

என் உடல்நிலை கருதி தயாரிப்பாளர் கலாநிதி மாறன் மீதமுள்ள படப்பிடிப்பை ஒத்திவைத்தார். இதனால் பல பேருக்கு வேலைவாய்ப்பு இழப்பு, பல கோடி ரூபா நட்டம்.

இவை அனைத்துக்கும் காரணம் என்னுடைய உடல் நிலை. இதை ஆண்டவன் எனக்குக் கொடுத்த ஒரு எச்சரிக்கையாகத்தான் பார்க்கின்றேன்.

நான் கட்சி ஆரம்பித்த பிறகு ஊடகங்கள், சமூக வலைத்தளங்கள் மூலமாக மட்டும் பிரசாரம் செய்தால் மக்கள் மத்தியில் நான் நினைக்கும் அரசியல் எழுச்சியை உண்டாக்கி தேர்தலில் பெரிய வெற்றியைப் பெற முடியாது.

இந்த யதார்த்தத்தை அரசியல் அனுபவம் வாய்ந்த யாரும் மறுக்கமாட்டார்கள். நான் மக்களைச் சந்தித்து கூட்டங்களை கூட்டி, பிரசாரத்துக்குச் சென்று ஆயிரக்கணக்கான ஏன் இலட்சக்கணக்கான மக்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

120 பேர் கொண்ட குழுவிலேயே கொரோனா பாதிப்பு ஏற்பட்டு நான் மூன்று நாள்கள் மருத்துவமனையில் மருத்துவர்களின் கண்காணிப்பில் இருக்க நேர்ந்தது. இப்போது இந்தக் கொரோனா உருமாறி புது வடிவம் பெற்று இரண்டாவது அலையாக வந்து கொண்டிருக்கின்றது.

தடுப்பூசி வந்தால்கூட நோய் எதிர்ப்பு சக்தியைக் குறைக்கும் மருந்துகளை சாப்பிடும் நான், இந்தக் கொரோனா காலத்தில் மக்களைச் சந்தித்து, பிரசாரத்தின்போது என் உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டால் என்னை நம்பி என்கூட வந்து என்னுடன் அரசியல் பயணம் மேற்கொண்டவர்கள் பல சிக்கல்களையும் சங்கடங்களையும் எதிர்கொண்டு மனரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் பல துன்பங்களைச் சந்திக்க நேரிடும்.

ஆகையால் நான் கட்சி ஆரம்பித்து அரசியலுக்கு வர முடியவில்லை என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த முடிவு ரஜினி மக்கள் மன்றத்தினருக்கும், நான் கட்சி ஆரம்பிப்பேன் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்கும், மக்களுக்கும் ஏமாற்றத்தை அளிக்கும், என்னை மன்னியுங்கள்.

நீங்கள் என்மேல் வைத்திருக்கும் அன்பிற்கும், பாசத்துக்கும் தலை வணங்குகிறேன். ரஜினி மக்கள் மன்றம் என்றும் போல் செயல்படும்.

தேர்தல் அரசியலுக்கு வராமல் மக்களுக்கு என்னால் என்ன சேவை செய்ய முடியுமோ அதை நான் செய்வேன். நான் உண்மையைப் பேச என்றுமே தயங்கியதில்லை

உண்மையையும், வெளிப்படை தன்மையையும் விரும்பும், என் நலத்தில் அக்கறையுள்ள, என்மேல் அன்பு கொண்ட என்னை வாழவைக்கும் தெய்வங்களான ரசிகர்களும், தமிழக மக்களும் என்னுடைய இந்த முடிவை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

வாழ்க தமிழ் மக்கள்! வளர்க தமிழ்நாடு!! ஜெய் ஹிந்த்!!! - என்றுள்ளது.

# சிவனொளிபாதமலைக்கு புனித சின்னங்கள் எடுத்துச்செல்லும் நிகழ்வு இன்று ஆரம்பம்!

2021ஆம் ஆண்டுக்கான சிவனொளிபாதமலை பருவ கால பூரணை தினமான யாத்திரை இன்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகியது.

இதன்படி புனித சின்னங்களை எடுத்துச்செல்லும் நிகழ்வு இன்று இடம்பெற்றது.

இரத்தினபுரி பெல்மதுளை கல்பொத்த ரஜமகா விகாரையிலிருந்து புனித விக்கிரகங்கள் நல்லதண்ணி பாதை வழியாக நேற்று நள்ளிரவு மலையுச்சிக்கு எடுத்து செல்லப்பட்டன என சிவனொளிபாதமலை நாயக்க தேரர் பெங்கமுவே தம்மதின்ன தெரிவித்தார்.

அந்தவகையில் பலாங்கொடை - பொகவந்தலாவ வீதியில் ஊர்வலம் பயணித்து, அவிசாவளை, ஹற்றன், நல்லதண்ணி ஊடாக சிவனொளி பாதமலைக்கு ஓர் ஊர்வலம் சென்றது. அடுத்த ஊர்வலம் குருவிட்ட - இரத்தினபுரி வீதி ஊடாக பயணித் தது. மூன்றாவது ஊர்வலம் பெல் மதுளை இரத்தினபுரி - ரஜமாவத்தை வழியாக சென்றது.

மேலும் சிவனொளிபாதமலை பருவகால யாத்திரையில் பங்கேற்கும் பக்தர்களுள் ஒரே தடவையில் 200 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் யாத்திரையில் பங்கேற்கும் அடியார்கள் தத்தமது பிரதேச செயலகங்களில் பதிவு செய்வதுடன் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படவில்லை என் பதை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் உறுதிப்படுத்தப் பட்ட அனுமதி பத்திரமொன்றை தம்வசம் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவு றுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் ஜனவரி மாதம் சிவனொளிபாதமலை பருவ கால யாத்திரையில் பங்கேற்கின்றமையைத் தவிர்த்து செயற்படுமாறு நுவரெலியா மாவட்ட செயலகம் பொதுமக்களை அறிவுறுத்தியுள் ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாநகர மேயர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு தோல்வியடைந்ததால் சபையின் மேயராக இருந்த ஆனோல்ட் தனது பதவியை இழந்துள்ளார்.

இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மேயர் தெரிவுக்கு யாரை நிறுத்துவது என இறுதித் தீர்மானம் எடுக்கும் கூட்டம் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைச் செயலகத்தில் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தின்போதே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என மாவை சேனாதிராஜா இன்று ஊடகங்கள் முன்னிலையில் தெரிவித்தார். நாளை காலை 9.30 மணியளவில் யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் தெரிவு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# அனைத்து மக்களுக்கும் ஏற்றவாறு பொதுவான ஆட்சியை நடத்துங்கள்!

## முன்னாள் எம்.பி. சிறிநேசன் கோரிக்கை

நாட்டிலுள்ள அனைத்து இன மக்களையும் சமத்துவமாக மதித்து, பொதுவான ஒரு ஆட்சியை செய்யுங்கள் என தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

அம்பாறையில் நேற்று (திங்கட்கிழமை) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஊடக சந்திப்பில் ஞா.சிறிநேசன் மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

எல்லா நாடுகளும் முற்போக்கு பாதையில் முன்னோக்கி பயணிக்க விரும்புகின்றன. ஏனோ தெரியவில்லை எமது நாட்டு ஆட்சியாளர்கள் பிற்போக்கு பாதையில் பின்னோக்கி பயணிக்கவே விரும்புகின்றனர்.

மேலும் பல்லின மக்கள் வாழ்கின்ற இந்நாட்டில், தேசிய நல்லிணக்கத்தை சிதைக்கின்ற நடவடிக்கையே முன்னெடுக்கப்படுகின்றது. தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த முடியாத நிலைமை நீடிக்கின்றது.

ஆள்கின்ற இனம், ஆளப்படுகின்ற இனம், அடக்குகின்ற இனம், அடக்கப்படுகின்ற இனம் என்று மக்களைப் பிரித்து பார்க்கின்றனர்.

புரட்சிகள் ஏற்படுவதற்கான அடிப்படைக் காரணம் சமத்துவமின்மையே ஆகும்.

எனவே சமத்துவமான நிலைமை உருவாக்கப்பட வேண்டும். மொழி, மதம், அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு ஆகியவற்றில் சமத்துவம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

இனப் பிரச்சினைக்கு உள்நாட்டு பொறிமுறை மூலமாகத் தீர்வு கண்டு தாருங்கள். ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை ஆட்சி வரும், பின்னர் அகன்று விடும்.

ஆனால் இனப் பிரச்சினைக்கான



தீர்வுதான் இல்லாமல் போய் கொண்டு இருக்கின்றது. அரசாங்கம் இவற்றை கருத்தில் கொண்டு கவனமாக செயற்பட வேண்டும். - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# புதியவகை வைரஸிலிருந்து தப்பிப்பதற்கு கடுமையான சுகாதார பாதுகாப்பு தேவை!

## அரச மருத்துவ சங்கம் எச்சரிக்கை

ஐரோப்பிய நாடுகளில் மாத்திரமின்றி ஆபிரிக்கா, மத்திய கிழக்கு மற்றும் ஆசிய நாடுகள் சிலவற்றிலும் புதிய வகை வைரஸ் பெருமளவில் இனங்காணப்பட்டுள்ளது.

எனவே இதன் பாதிப்பிலிருந்து நாம் தப்பித்துக் கொள்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவானதாகும். இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் இலங்கையில் மேலும் கடுமையான சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

எவ்வாறான புதிய வகை வைரஸ் தோன்றினாலும் அடிப்படை சுகாதார விதிமுறைகளை முறையாகப் பின்பற்றினால் அவற்றிலிருந்தும் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

புதிய வகை வைரஸ் இளைஞர் மத்தியிலேயே தீவிரமாகப் பரவலடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. அத்தோடு வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அபாயம் அதிகமாகும்.

இலங்கையில், தொற்றுக்குள்ளானோரில் 80 சதவீதமானோர் குணமடைந்துள்ளனர். ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாட்டில் மரணங்களின் எண்ணிக்கை குறைவாகும். எனினும் கொழும்பு மாவட்டத்தில் வைரஸ் பரவல் கொழும்பு மாநகரசபையிலேயே மையம் கொண்டிருந்தது.

எனினும், தற்போது அவிசாவளை போன்ற பகுதிகளிலும் அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்படுகின்றமையிலிருந்து கொழும்பு மாநகர சபையில் காணப்பட்ட அபாயம் ஏனைய பகுதிகளுக்கு பரவியுள்ளமை தெளிவாகியுள்ளது.

எனவே, ஏனைய பகுதிகள் தொடர்பில் எப்போதும் அவதானமாக இருக்க வேண்டியது அத்தியாவசியமானதாகும். எனினும் தற்போது அட்டலுகம குறித்து தொற்று



நோயியல் பிரிவு எந்த கருத்தையும் தெரிவிப்பதில்லை. அங்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்படுகின்றனவா இல்லையா என்பதும் தெளிவில்லை. இவ்வாறு பொறுப்பற்று செயற்படுவது மேலும் அபாய நிலைக்கே நாட்டை இட்டுச் செல்லும். எவ்வாறிருப்பினும் இவ்வாறான நிலைமைகளிலிருந்து நாட்டை மீட்பதற்கு மக்களின் முழுமையான ஒத்துழைப்பே அத்தியாவசியமானதாகும். - என்றார்

# சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடும் பணி இராணுவத்திடம்!

எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடும் பொறுப்பு இலங்கை இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 வருடங்களாக தென் ஆபிரிக்க நிறுவனம் ஒன்று சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிட்டு வந்த நிலையில், அந்த நிறுவனத்துடனான ஒப்பந்தம், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் முறித்துக் கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பிரகாரமே 2021 ஜனவரி முதலாம் திகதி முதல் சாரதி அனுமதிப் பத்திரங்களை இராணுவத்தினர் அச்சிடவுள்ளனர் என மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் சுமித் அழகக்கோன் தெரிவித்தார்.

ஒரு மாதத்தில் 60 ஆயிரம் முதல் 90 ஆயிரம் வரை சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்படும் நிலையில், இராணுவத்தினர் அந்தப் பணியை முன்னெடுப்பதன் ஊடாக வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு செலுத்தப்பட்ட பாரிய தொகைப் பணம் சேமிப்பாகும் என அவர் கூறினார்.

# காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் கிளிநொச்சியில் கலந்துரையாடல்!



வலிந்து காணாமலாக்கப்பட்டோர் விடயங்கள் தொடர்பான கடந்த கால செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் எஸ்.சிவகரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இன்று (செவ்வாய்க்கிழமை) காலை 10.30 மணியளவில் புனித திரேசா மண் டபத்தில் ஆரம்பமானது.

இந்தக் கலந்துரையாடலில் திருகோணமலை மறைமாவட்ட கத்தோலிக்க ஆயர் தோமஸ் இமானுவேல், அருட் தந்தையர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன், அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டுள்ளனர்.




மஞ்சள் கன்றுகள் விற்பனைக்கு!

நல்ல தரமான இரண்டு அடி வரை வளர்ந்த
ஒன்றரை மாத மஞ்சள் கன்றுகள்
யாழ்ப்பாணத்தில் விற்பனைக்கு உண்டு.
விலை - 150/=







கற்பகவனம் விற்பனை நிலையம்.
461, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் முற்றம் - Yarl Muttam)
021 492 7778

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.12.2020 இல் வெளியிடப்பெற்றது.